**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

---------------------------------------------------------------------------------------------

**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI**

**C.C.No.09/2023**

PROSECUTION WITNESS No. PW.4

| | | |
|---|---|---|
| Name | : | Mr.K.Manivannan |
| Father Name | : | |
| Age | : | |
| Address | : | |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 19th day of September, 2024.

---

எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை:-** நான் தற்போது சென்னை தடய அறிவியல் துறையில் கணினி தடயயியல் பிரிவில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். நான் சுமார் 25 ஆண்டுகாலம் தடய அறிவியல் துறையில் பணிபுரிந்து வருகிறேன். கணினி தடயவியல் பிரிவில் 15 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் பெற்றுள்ளேன். கடந்த 13.02.2020 அன்று பெருநகர நடுவர், சி.சி.பி. வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சென்னை அவர்களால் அனுப்பப்பட்ட குற்ற எண் 441/2015 தொடர்புடைய வழக்கு பொருட்களான மொத்தம் 16 மாதிரிகள் சரியான முத்திரையுடன் ஆய்விற்காக பெறப்பட்டது. அதிலிருந்த மாதிரிகளான Laptop, Hard Disk – 2 No's, Memory Card -1, Pen Drive – 1, Hard Disks – 3 No's, Memory Cards – 2 No's. Pen drive -1, Hard Disk – 3 No's and Laptops – 2 No's ஆகியவை முறையே மாதிரிகள் 1 முதல் 16 ஆக குறியிடப்பட்டு ENCASE என்ற மென்பொருள் உதவியுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதிலிருந்த ஆய்வு விவரங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி மொத்தம் 16 இணைப்பு அறிக்கைகளாக

வழங்கப்பட்டுள்ளது. மேலும் கோப்புகள் தொடர்பான அறிக்கைகள் ஒரு DVD யில் வழங்கப்பட்டு, அதன் 2 நகல்கள் அறிக்கையுடன் கொடுக்கப்பட்டது. மேலும் மற்றொரு Hard Disk ன் அனைத்து மாதிரிகளில் இருந்தும் வெளிக்கொணரப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட கோப்புகள் நகல் எடுக்கப்பட்டு வழங்கப்பட்டது. இதில் Hard Disk 7 மற்றும் 8 ஆகியவை வெளிக்கொணர முடியாத நிலையில் பழுதடைந்து இருந்தது. Memory Card 9 ல் கோப்பு எதுவும் காணப்படவில்லை. Memory Card 10 ல் திரைப்பட பாடல்கள்தான் பதிவாகி இருந்தது. மேலும் Hard Disk 12 யை ஆய்வு செய்ய முடியவில்லை. அதே போல் Laptop ல் இருந்த Hard Disk Item 15 ஐ ஆய்வு செய்ய முடியவில்லை. இந்த அறிக்கை நாங்கள் வழங்கிய ஆய்வறிக்கை எண் CF/29/2020 dated 29.10.2020 எண் கொண்ட அறிக்கை ஆகும். நீதிமன்றத்தில் காட்டப்படும் அறிக்கை மேற்சொன்ன எங்களால் வழங்கப்பட்ட அறிக்கையின் நீதிமன்றத்தால் சான்றிடப்பட்ட நகல். CF/29/2020 dated 29.10.2020 எண் கொண்ட அறிக்கையின் சான்றிட்ட நகல் - **Ex.P-14 (120 Sheets)**. மேலும் 09.07.2020 அன்று மேற்சொன்ன பெருநகர நடுவர் அவர்களால் அனுப்பப்பட்ட இதே குற்ற எண் தொடர்புடைய Hard Disk 1 மேலும் ஒரு புதிய Hard Disk உடன் ஆய்விற்காக அனுப்பப்பட்டது. அந்த Hard Disk ல் இருந்த தகவல்கள் குறிப்பிட்ட மென்பொருள் உதவியோடு ஆய்வு செய்து தேவையான ஆய்வு விவரங்கள் இணைப்பு அறிக்கை 1 முதல் 3 வரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட கோப்புகள் ஒரு DVD யில் நகலெடுக்கப்பட்டு வழங்கப்பட்டது. மேலும் புதிய Hard Disk ல் தேவையான கோப்புகள் அனைத்தும் நகலெடுக்கப்பட்டு அறிக்கையுடன் இணைத்து வழங்கப்பட்டது. இது நாங்கள் வழங்கிய அறிக்கையின் CF/116/2020 dated 23.09.2020 எண் கொண்ட அறிக்கை ஆகும். நீதிமன்றத்தில் காட்டப்படும் அறிக்கை மேற்சொன்ன எங்களால் வழங்கப்பட்ட அறிக்கையின் நீதிமன்றத்தால் சான்றிடப்பட்ட நகல். CF/116/2020 dated 23.09.2020 எண் கொண்ட அறிக்கையின் சான்றிட்ட நகல் - **Ex.P-15 (31 Sheets)**. மேலும் 22.01.2021 அன்று மேற்சொன்ன பெருநகர நடுவர் அவர்களால் அனுப்பப்பட்ட Laptop – 1, Hard Disk-1 மற்றும் ஒரு SSD Type Hard Disk-1 and Pen Drive -1 ஆகியவை மீண்டும் சரியான முத்திரையுடன் ஆய்விற்காக பெறப்பட்டது. இது முந்தைய அறிக்கை மற்றும் ஆய்வுகளின் தொடர்ச்சியாக ஆய்வு செய்யப்பட்டு, தற்போது கேட்கப்பட்டிருந்த குறிப்பிட்ட வினாக்களுக்கு அறிவியல் பூர்வமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டது. இதில் Hard Disk-1 ல் கேட்கப்பட்ட 4

வினாக்களுக்கும் மற்றும் மாதிரி 2 ல் கேட்கப்பட்ட 5 வினாக்களுக்கும் மாதிரி 3 ல் கேட்கப்பட்ட 2 வினாக்களுக்கும் மாதிரி 5 ஆன Pen Drive ல் கேட்கப்பட்ட 62 வினாக்களுக்கும் விடையளித்து தேவையானவற்றிற்கு கோப்புகளை அப்படியே நகல் எடுத்தும் வழங்கப்பட்டுள்ளது. மாதிரி 1 ற்கு இணைப்பு அறிக்கைகள் 1 முதல் 2, மாதிரி 2 ற்கு இணைப்பு அறிக்கைகள் 3 முதல் 6 வரை, மாதிரி 3 ற்கு இணைப்பு அறிக்கை 7, மாதிரி 5 ற்கு இணைப்பு அறிக்கை 8 முதல் 53 வரை வழங்கப்பட்டுள்ளன. இந்த விடைகளில் குறிப்பிடப்பட்ட கோப்புகளின் நகல்கள் ஒரு DVD யில் முழு கோப்புகளோடு நகல் எடுத்து வழங்கப்பட்டுள்ளது. இணைப்பு அறிக்கைகளில் விசாரணைக்காக கேட்கப்பட்ட கேள்விகளுக்காக குறிப்பிட்ட கோப்புகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட தேவையான தகவல்கள் மட்டும் பிரிண்ட் அவுட் எடுத்து இவ்வறிக்கையுடன் இணைத்து வழங்கப்பட்டுள்ளது. இது நாங்கள் வழங்கிய அறிக்கை CF/27/2021 dated 31.03.2023 – **Ex.P16 (109 Sheets).** ஆய்விற்கு பிறகு குறிப்பிட்ட வழக்கு பொருட்கள் மற்றும் அறிக்கை ஆகியவற்றை தற்போதைய வழக்கு நீதிமன்றமான MP's and MLA's Special Court ற்க்கு 19.05.2023 அன்று திருப்பி அனுப்பப்பட்டது. மேற்சொன்ன 3 அறிக்கைகளும் எங்களால் வழங்கப்பட்ட சுருக்கமான அறிக்கைகள். CF27/2021 என்ற அறிக்கையில் Pen Drive 5 க்காக கொடுக்கப்பட்ட விளக்கங்களில், வரிசை எண் 33 ல் ஒரு கோப்பு பெயர் '10 1 2015 CORP SENT DATA. Xlsx' என்ற கோப்பானது 11 Spread Sheets களை கொண்டது. இவ்வறிக்கையுடன் இணைத்து வழங்கப்பட்டுள்ள DVD யில் நகலெடுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அப்படி அனுப்பப்பட்ட கோப்பின் ஒரு Spread Sheets ல் நீதிமன்றத்தால் பிரிண்ட் எடுக்கப்பட்டு, சான்றிடப்பட்டு வழங்கப்பட்ட ஆவணம்தான் நீதிமன்றத்தில் காட்டப்படுவது. அது **Ex.P17 (134 Sheets).** மேற்படி அறிக்கையில் Pen Drive 5 க்கான விளக்கத்தில் வரிசை எண் 11 ல் கொடுக்கப்பட்ட கோப்பு பெயர் ' ALL PET ON 10 05 2015.xlsx' என்ற கோப்பானது 1 Spread Sheet உடன் காணப்பட்டது. அதன் விளக்கம் இணைப்பு அறிக்கை 13 ஆக இணைத்து வழங்கப்பட்டுள்ளது. நாங்கள் கொடுத்த DVD யில் குறிப்பிட்ட பெயருடைய கோப்பில் இருந்த இவ்வழக்கிற்காக கேட்கப்பட்ட கேள்விக்கான விடையை நாங்கள் இணைப்பறிக்கை 13 ல் வழங்கியுள்ளோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் மேற்படி கோப்பின் பிரிண்ட் அவுட் என்று சொல்லப்படும் அதிக பக்கங்கள் கொண்ட அறிக்கையின் ஆவணங்களை DVD யை பார்த்து விட்டுதான் சொல்ல முடியும். நான்

அலுவலகத்தில் இருந்து எடுத்து வந்துள்ள அறிக்கை தொடர்பான ஆவணங்களுடன் மேற்கண்ட DVD யின் நகலும் உள்ளது. சாட்சி நீதிமன்ற அனுமதி பெற்று மேற்படி DVD யை ஆய்வு செய்துவிட்டு, Ex.P17 ஆவணங்கள், மேற்படி DVD யில் உள்ள கோப்புகளில் இருந்து பிரிண்ட் அவுட் செய்யப்பட்டவைதான் என்று சாட்சியம் அளிக்கிறார். CF/27/2021 DVD யில் உள்ள கோப்புகளில் இருந்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட ஆவணங்கள் **Ex.P18 (298 Sheets).** எங்கள் அறிக்கையில் Pen Drive 5 ல் கொடுக்கப்பட்டுள்ள வரிசை எண் 56 ல் கொடுக்கப்பட்ட கோப்பில் இருந்த CS CALCULATION என்று Spread Sheet தொடர்படைய நீதிமன்றத்தால் சான்றிடப்பட்ட நகல் பிரிண்ட் அவுட் **Ex.P19 (2 Sheets)**. எங்கள் அறிக்கையில் வரிசை எண் 55 ல் குறிப்பிட்டுள்ள கோப்பின் ஒரு Spread Sheet ல் இருந்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட, நீதிமன்றத்தால் சான்றிடப்பட்ட ஆவணம்தான் என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது. அது **Ex.P20 (2 Sheets).** நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது, எங்கள் அறிக்கையில் வரிசை எண் 30 ல் குறிப்பிடப்பட்டுள்ள கோப்பின் Sheet 4 ல் இருந்து பிரிண்ட் அவுட் செய்யப்பட்ட நீதிமன்றத்தால் சான்றிடப்பட்ட ஆவணம். அது **Ex.P21 (1 Sheet).** மேலும் எங்கள் அறிக்கையில் வரிசை எண் 48 ல் குறிப்பிட்டுள்ள கோப்பின் 'CS ac.xlsx' Sheet 7 ல் இருந்து பிரிண்ட் அவுட் செய்யப்பட்ட, நீதிமன்றத்தால் சான்றிடப்பட்ட ஆவணம் **Ex.P22 (1 Sheet)**. அதில் காணப்படும் தகவல்கள் Field Names, Alphabetical Order ல் பிரிண்ட் அவுட் செய்யப்பட்டது, ஆனால் Contents ல் எந்த மாற்றமும் இல்லை. மேலும் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது எங்களுடைய மற்றொரு அறிக்கை எண் CF / 29 / 2020 இணைத்து வழங்கப்பட்டுள்ள DVD யில் இருந்த 'ROUGH AC 2.xlsx' என்ற கோப்பில் 'CF29 _ 2020/ITEM 5 HP PENDRIVE/COPIED FILES/C/CS/My Documents Route' என்ற பாதையில் இருந்த கோப்பில் AC என்று பெயரிடப்பட்ட Spread Sheet ல் இருந்து எடுக்கப்பட்ட, நீதிமன்றத்தால் சான்றிடப்பட்ட பிரிண்ட் அவுட் ஆவணம் **Ex.P 23 ( 2 Sheets).**

**குறுக்கு விசாரணை** :- (எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |